2013 ஏப்ரல் 15]

துறையாக மாற்றியிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அனுமதியைப் பெற்று உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை தங்களின்வாயிலாக உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 218, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

218—

காகித ஆலை

*****6370—திரு. பி.கே. வைரமுத்து:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமயம் தொகுதி, அரிமழம் ஒன்றியத்தில் காகித ஆலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஒரு காகித தொழிற்சாலை நிறுவப்பட வேண்டுமானால், மூலதனமாக 1,200 கோடி ரூபாயும், சுமார் ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பும், ஆண்டு ஒன்றுக்கு 6 இலட்சம் மெட்ரிக் டன் அளவு கொண்ட கரும்புச் சக்கையும், 1 இலட்சத்து 5 ஆயிரம் டன் கொண்ட கூழ் மரங்களும் தேவைப்படுவதால், மாண்புமிகு உறுப்பினர் கோரும் திருமயம் தொகுதி, அரிமழம் ஒன்றியத்தில் தேவையான மூலப்பொருள்கள் கிடைக்க வாய்ப்பு இல்லையென்றாலும், வேறு தொழில்கள் தொடங்க தொழில்முனைவோர்கள் முன்வருவார்களானால் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலித்து தொழிற்சாலை அமைப்பதற்குரிய ஏற்பாடு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து அவர்கள்.*

திரு. பி.கே. வைரமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் உரிமையான காவேரியை மீட்டு, சட்டப் போராட்டம் நடத்தி, இமாலய வெற்றி கண்ட பொன்னியின் செல்வியே, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழர் வரலாற்று உரிமையாம் சித்திரை முதல் தேதி தமிழ்ப் புத்தாண்டு உரிமையை மீட்டெடுத்த எங்கள் இதய தெய்வமே, (மேசையைத் தட்டும் ஒலி) ஸ்ரீ விஜய புத்தாண்டில் வெற்றிகளைக் குவித்திட, புதியதோர் பாரதத்தை உருவாக்கிட, போர் பரணி பாடி புறப்பட்டிருக்கும் எங்கள் தாயே, (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமயம் தொகுதி, அரிமழம் பகுதியில் புதிய தொழிற்சாலை அமைப்பதற்கு பரிசீலிக்கப்படும் என்ற நல்ல தகவலை அளித்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கும், என் சார்பிலும், தொகுதி மக்களின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ் அவர்கள்.

திரு. என்.வி. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வாழ்கின்ற ஏழையெளிய மக்களின் இதய தெய்வமாக, நாங்கள் தினந்தோறும் வணங்குகின்ற, இறைவனாக வழிபடுகின்ற தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சுதந்திரப் போராட்ட காலத்தில் உப்பு சத்தியாகிரகப் போராட்டம் நடைபெற்று, சரித்திரத்தில் இடம் பெற்ற ஊர் எனது தொகுதியான வேதாரண்யம். தமிழ்நாட்டில் உப்பு உற்பத்தியில் இரண்டாவது இடமாக விளங்குகின்றது. சரியான விலை இல்லாத காரணத்தினால், உப்பு உற்பத்தி செய்கின்றவர்கள் எல்லாம் மிகவும் சிரமப்படுகின்றார்கள். எனவே, உப்பை மூலதனமாகக் கொண்டு ஒரு காஸ்டிக் சோடா தொழிற்சாலை அமைத்தால் எனது தொகுதி மக்கள் மிகவும் பயனடைவார்கள். எனவே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்கி,

2013 ஏப்ரல் 15]

ஒரு காஸ்டிக் சோடா தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'உப்பு இல்லாப் பண்டம் குப்பையிலே' என்ற பழமொழியை மாற்றி, இன்றையதினம் உப்புத் துறையும் இலாபத்தை ஈட்டுகின்ற அளவுக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு சிறப்பாகச் செயலாற்றிக் கொண்டிருக்கிறது என்பது அனைவருக்கும் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) வேதாரண்யம் பகுதியில் உப்பு அதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்ற காரணத்தால், மாண்புமிகு உறுப்பினர் புதிய தொழிற்சாலை அமைக்க வேண்டும் என்று கேட்டிருக்கின்றார்கள். நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலித்து, உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் தேசிய உற்பத்திக் கொள்கையின்கீழ் அறிவிக்கப்பட்ட National Investment and Manufacturing Zone மூலம் இதுவரை இந்தியாவில் 12 இடங்களில் அப்ரூவல் தரப்பட்டு, தலா 2 ஆயிரம் கோடி ரூபாய் திட்டங்கள் செயல்படத் துவங்கிவிட்டன. தமிழகத்தில் ஏதாவது ஒரு இடத்தில் இந்தத் திட்டத்திற்கு அரசு பரிந்துரை அளிக்க வாய்ப்பிருக்கிறதா? விருதுநகர், சாத்தூர் ரோடிலிருக்கும் அடையாளம் காணப்பட்ட ஆயிரம் ஹெக்டேர் இடத்தில் இந்த NIMZ பரிந்துரை செய்யப்படுமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி காகிதத் தொழிற்சாலை அமைப்பது பற்றி. மாண்புமிகு திரு. பாண்டியராஜன் அவர்கள் புதிய

தொழிற்சாலை அவருடைய பகுதியிலே அமைக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்கெனவே நிதிநிலை அறிக்கையில் தெளிவாக "தென் மாவட்டங்களுக்கென்று புதிய தொகுப்புத் தொழிற்சாலைகள் அறிவிக்கப்படும்" என்று சொல்லியிருக்கின்றார்கள். நிச்சயமாக அந்தப் பகுதி மக்களுக்காக மாண்புமிகு அம்மா அவர்கள் பல்வேறு தொழிற்சாலைகளை அமைக்க இருக்கின்றார்கள் என்று சொல்லி, மூலக் கேள்விக்கும், இந்தக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லாத காரணத்தினால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களை தனிக் கேள்வியாக போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 219, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம், மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

219—

சார் பதிவாளர் அலுவலகம்

***930—திரு. கே.பி. பரமசிவம்:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஒன்றியத்தில் சார் பதிவாளர் அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஒன்றியத்தில் சார் பதிவாளர் அலுவலகம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம் அவர்கள்.*